செ.வெ.எண்: 64 நாள்:23.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவின் பொழுது அரசு வகுத்துள்ள பாதுகாப்பு நெறிமுறைகளை அனைத்து தரப்பினரும் முறையாக கடைபிடிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விநாயகர் சதுர்த்தி விழா நடைபெறுவதைத் தொடர்ந்து சட்டம் ஒழுங்கு பராமரிப்பது தொடர்பாக அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23-8-2016) நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

நமது மாவட்டத்தில் 05.09.2016 அன்று விநாயகர் சதுர்த்தி விழா நடைபெறுவதைத் தொடர்ந்து சட்டம் ஒழுங்கு பராமரிப்பது தொடர்பாக அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விநாயகர் சதுர்த்தியின் போது உயர்நீதி மன்ற உத்தரவின்படி விநாயகர் சிலைகளின் உயரம் 5 அடிக்கு மேல் இருக்கக்கூடாது. இரசாயன பூச்சுக்கள்( பிளாஸ்டர் ஆப் பாரீஸ் ) கொண்ட சிலைகளை பயன்படுத்தக்கூடாது. சிலைகள் இயற்கையான களிமண்ணினால் மட்டுமே அமைக்கப்பட வேண்டும். உரிய உத்தரவு இன்றி பொது இடங்களில் புதியதாக சிலைகள் நிறுவி யாரும் வழிபாடு செய்யக்கூடாது. ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டுமே ஊர்வலங்கள் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். இந்த விபரங்கள் அனைத்தும் சிலை அமைப்பாளர்களிடம் தெரிவிக்கப்பட வேண்டும்.

நீர் நிலைகளில் சிலைகளை கரைக்கும் பொழுது சிலையின் மேல் உள்ள அலங்காரப் பொருள்களை (பிளாஸ்டிக், துணிகள் போன்றவை) தனியாக பிரித்து நீர்நிலையின் கரையில் ஒரு இடத்தில் சேகரித்து, விழா முடிவுற்றபின்பு அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.செயற்கை வர்ணப்பூச்சுக்கள் கொண்ட சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதை அனுமதிக்கக் கூடாது. இதனால் நீர்நிலைகள் மாசுபடுவதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் விநாயகர் சிலைகளை அரசு அனுமதித்த இடங்களில் மட்டுமே கரைக்க வேண்டும்.

மேலும், சார் ஆட்சியர் புதுக்கோட்டை மற்றும் வருவாய் கோட்ட அலுவலர்கள் அறந்தாங்கி/இலுப்பூர் ஆகியோர் தங்களது கோட்டங்களில் சிலை அமைக்க உத்தேசித்துள்ள சிலை அமைப்புக் குழுவினரை அழைத்து எதிர்வரும் 29.08.2016-க்குள் கூட்டம் நடத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், மேற்படி கூட்டத்தில் மதத் தலைவர்கள், காவல் துறை அலுவலர்கள், உள்ளாட்சித் துறை அலுவலர்கள், பிற துறை அரசு அலுவலர்கள் கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து வட்டாட்சியர்களும், தங்களது வட்டத்தில் சிலை அமைக்க உத்தேசித்துள்ள சிலை அமைப்புக் குழுவினரை அழைத்து கூட்டம் நடத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், இக்கூட்டத்தில் காவல் துறை அலுவலர்கள், உள்ளாட்சித் துறை அலுவலர்கள், பிற துறை அரசு அலுவலர்கள் கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இக்கூட்டத்தில் இந்து, முஸ்லீம், மற்றும் கிறிஸ்துவ மதங்களின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களுக்கு உரிய அழைப்புக் கடிதம் அனுப்பி அவர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

மேலும், வட்டாட்சியர்கள் தங்கள் தாலுகாவில் விநாயகர் சதுர்த்திக்கென பிரத்தியேகமாக பொது இடங்களில் விநாயகர் சிலைகள் வைத்து வழிபாடு செய்யும் விபரங்களை கிராம நிர்வாக அலுவலர்களிடமிருந்து பெற்று தொகுத்து, அவ்விபரங்களை படிவத்தில் தயார் செய்து 29.08.2016-க்குள் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களிடம் ஒப்படைக்க

வேண்டும். இதனை சார் ஆட்சியர் புதுக்கோட்டை மற்றும் வருவாய்க் கோட்டாட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

விநாயகர் சதுர்த்தி விழா ஊர்வலத்தின் போது விழா நடத்துவோர் பிற மதத்தினர்களை அவமதிக்கக்கூடிய வகையில் எந்த வகையிலும் கோசங்களோ, ஜாடைகளோ, செய்யக்கூடாது.தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பிற மதத்தினரின் வழிபாட்டு தலங்களின் வழியாக ஊர்வலம் செல்வதாக இருந்தால் எந்த வகையிலும் அம்மதத்தினரின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் இடையூறு ஏற்படும் வகையில் நடந்துக்கொள்ளக்கூடாது. பிற மதத்தினரும் மத நல்லிணக்கத்தைப் போற்றும் வகையில் அமைதியான முறையில் விநாயகர் சதுர்த்தி விழா நடக்க ஒத்துழைப்புக் கொடுப்பதுடன் ”அனைவரும் இந்தியரே” என்பதை மனதில் கொண்டு விழாவிற்கு ஒத்துழைப்பு கொடுக்கும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நமது மாவட்டத்தில் நடைபெறும் விநாயகர் சதுர்த்தி விழாவின் பொழுது அரசு வகுத்துள்ள பாதுகாப்பு நெறிமுறைகளை அனைத்து தரப்பினரும் முறையாக கடைபிடித்து விநாயகர் சதுர்த்தி விழாவினை அமைதியாக நடத்திட ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் ஜெ.லோகநாதன், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.சந்தோஷ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**